JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | **284/2024** |
| Deposition of witness for | **D.W. 1** | Prosecution /Defence / Court | |
| Name | **சண்முகம்** | Village | தென்றல் நகர், பெருந்துறை |
| Father's Name | **கோபால்** | Taluk | |
| | | Age | |

**Complainant present**. **A**1 **present**. **A**2 **absent**. **u/s**. 317 **crpc Petition filed through online and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 25.06.2026.**

**<u>எதிரிகள் தரப்பில் முதல் விசாரணை</u>**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பெருந்துறை நகராட்சியில் துணை சேர்மனாக உள்ளேன். எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தை கொண்டு வந்துள்ளேனா என்றால் ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை. புகார்தாரர் குமரேசன் மற்றும் எதிரிகள் பிரகாஷ் மற்றம் கார்த்திகாதேவி ஆகியோர்கள் இருவரும் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து சமாதானம் பேசினார்களா என்றால் இல்லை. தனிப்பட்ட முறையிலும் புகார்தாரர் மற்றும் எதிரிகளை தெரியுமா என்றால் புகார்தாரர் குமரேசன் என்னுடைய பகுதியில் வசிக்கக் கூடியவர் ஆவார். 1 ம் எதிரி மாமியார் எங்கள் பஞ்சாயத்தில் கம்ப்யூட்டர் பிரிவில் பணிபுரிந்தவர் என்ற முறையில் அவர்களை எனக்கு தெரியும். எ.சா.ஆ. 1 ஆவணம்

என்னுடைய அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டதா என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் சாட்சி எ. சா. 1 பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1. வழக்கின் புகார்தாரரும், எதிரிகளும் என்னுடைய அலுவலகத்திற்கு வந்து சமரசம் பேசி எ.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. தற்போது நான் புகார்தாரர் தனது பகுதியில் வசிப்பதால் அவருக்கு ஆதரவாக எ.சா.ஆ.1 ஆவணத்தை எழுதவில்லை என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த ஆவணத்தை பற்றி தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** 1 ம் எதிரியை நான் எப்போது பார்த்தேன் என்றால் 1 மாதம் முன்பாக 1 ம் எதிரி பிரகாசும், அவரது மனைவியும், மாமியார் மற்றும் குழந்தைகளுடன் வந்தார்கள். பிரகாஷ் செல்போனில் ஒரு லெட்டரை காட்டி ஒரு வழக்கு உள்ளது என்றும், எனக்கு ஆதரவாக சாட்சியம் கொடுக்கும் படியும் கேட்டார். நான் அவ்வாறு செய்ய முடியாது என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்து விட்டேன். எ.சா.ஆ.1 லெட்டரில் என்னுடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். எனக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் மறு குறுக்கு விசாரணை**

1. நான் நகராட்சி துணை தலைவாக இருப்பதால் சட்டத்திற்கு புறம்பாக ஒரு காரியத்தை செய்ய சொன்னால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். ஒரு மாதத்திற்கு முன்பாக 1 ம் எதரி என்னிடம் தனக்கு சாதகமாக சாட்சி சொல்லும்படி சொன்னதற்கு காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை